**I ADDL. DISTRICT MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**MCOP.NO.323/2019**

| | |
|---|---|
| **NAME** | : விக்னேஷ் |
| **FATHER NAME** | : |
| **VILLAGE** | : |
| **TALUK** | : |
| **CALLING** | : |
| **RELIGION** | : |
| **AGE** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 13.07.2023.**

குறுக்கு விசாரணை

இந்த மனுவில் நான் 1ம் மனுதாரர் என்றால் சரி. நான் பைனல் ஆண்டு எம்.ஏ, படிக்கிறேன். என் தாயாரின் கல்வித்தகுதியை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் தாயாரின் கல்வித்தகுதிக்கான ஆவணத்தை தாக்கல் செய்தால் அவருடைய பிறந்ததேதி தெரியவரும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் அரசுப் பள்ளியில் வேலை பார்த்தார் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. என் தாயாருக்கு மாத வருமானம் ரூ.30,556/- என கூறியுள்ளேன் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.த.சா.ஆ.15 ஆவணம் முன்னிலைக்கு என் தாயாரின் மாத வருமானம் ரூ.49,286/- என கூறியுள்ளேன். என் தாயாருக்கு கழிவுகள் எல்லாம் போக மீதம் ரூ.43,557/- என்பதற்கான சம்பளச் சான்று தாக்கல் செய்துள்ளேன். என் தாயார் வருமான வரி செலுத்துபவர். அதற்குண்டான ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. மனுவில் உள்ள ஷரத்துக்களை வேண்டுமென்றே சத்திய பிரமாணத்தில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த ஷரத்தின் கீழ் என் தாயாரின் இறப்பிற்காக இந்த மனுவே தாக்கல் செய்ய முடியாது என்றால் தெரியாது. பத்தி எண்.1ல் என் தாயாரின் கணவர் பெயர் சொல்லாமல் அவரது அப்பா பெயர் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. பத்தி எண்.19ல் 1ம் எதிர்மனுதாரரைப் பற்றி கூறவில்லை என்றால் தெரியாது. பத்தி எண்.22ல் எங்கள் சவுகரியத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. என் தகப்பனார்தான் 1ம் எதிர்மனுதாரர் அவர்தான் வண்டியை ஓட்டிச் சென்றார் என்றால் சரி. அவர்தான் வாகனத்தின்

உரிமையாளர் என்றால் சரி. என் அப்பாவிடம் எப்படி விபத்து நடந்தது என கேட்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். நான், என் அப்பா எல்லாரும் ஒரே குடும்பமாகத்தான் இன்றையதேதிவரை இருக்கிறோம் என்றால் சரி. என் தகப்பனார் ஓட்டிச் சென்ற வாகனத்தின் பின்னால் வந்த மற்றொரு இரு சக்கர வாகனம் TN23-BL-6915 வாகனம் வேகமாக வந்து என் தகப்பனார் சென்ற வாகனத்தின் மீது இடித்து விபத்து ஏற்பட்டது என்றால் சரி. அதனால் என் தாயார் இறந்துவிட்டார் என்றால் சரி. அந்த TN23-BL-6915 வாகனத்தின் உரிமையாளரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரி. அந்த TN23-BL-6915 வண்டிக்கு இன்சூரன்ஸ் கிடையாது என்றால் சரி. நான் தாக்கல் செய்த மனுவில் TN23-BL-6915 என்ற வண்டியின் மீது இனி எந்த வழக்கும் தாக்கல் செய்யப்போவதில்லை என கூறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க வாய்ப்பிருந்தும் நான் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டதால் கருணை அடிப்படையில் வேலை கேட்டு நான் மனு கொடுத்துள்ளேன். அந்த மனு இன்னும் நிலுவையில்தான் உள்ளது. என் தாயாருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரி. என் தாயார் இரு சக்கர வாகனத்தில் பயணிக்கும்போது தலைக்கவசம் அணிந்துதான் பயணிக்க வேண்டும் என்றாலும் என் தாயாரும் இறப்பிற்கு ஒரு காரணம் என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு சட்டப்படியும், சங்கதிப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த ஒரு சங்கதியிலேயே இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.